"ஏழ்மையும், அறியாமையும் கனவுகளை
அழித்துவிட அனுமதியோம்..."

# UNIT - 4

# இந்திய வரலாறு

## TNPSC - GROUP I, II, II A, IV



## திண்ணை

### பயிற்சிப் பட்டறை, தேனி

9940970325 Thinnai Theni Thinnai Competitive Exam thinnnaimail@gmail.com
Thinnai Study Circle 9361482208

ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை அழித்துவிடஅனுமதியோம்...

# திண்ணை

பயிற்சிப் பட்டறை, தேனி

வழங்கும்

# இந்திய வரலாறு




திண்ணை பயிற்சி பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, NRT நகர், தேனி

9940970325 Thinnai Competitive Exam Thinnai Theni thinnaimail@gmail.com

Thinnai Study Circle 9361482208

# திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!

# வரலாறு

| S.No | பொருளடக்கம் | Page No |
|---|---|---|
| 1 | சிந்து சமவெளி நாகரிகம் | 2 |
| 2 | குப்தர்கள் | 14 |
| 3 | டெல்லி சுல்தானியம் | 34 |
| 4 | முகலாயப் பேரரசு | 48 |
| 5 | மராத்தியர் | 62 |
| 6 | விஜயநகர - பாமினி அரசுகள் | 70 |
| 7 | தென்னிந்திய அரசுகள் | 82 |
| 8 | இந்திய சமூக பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சிகளும் | 139 |
| 9 | இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை | 164 |
| 10 | இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம் | 203 |

# தென்னிந்திய அரசுகள்

## பல்லவ பேரரசு

**வரலாற்றுச் சான்றுகள் பட்டயச் சான்றுகள்**

தமிழ்நாட்டில் முதல் முதலில் செப்புப் பட்டயங்களைக் கொடுத்தவர்கள் பல்லவர்களேயாவர். இப்பட்டயங்கள் மூன்று வகைப்படும்.

1. பிராகிருதப் பட்டயங்கள்
2. சமஸ்கிருதப் பட்டயங்கள்
3. சமஸ்கிருத – தமிழ் பட்டயங்கள்

**பிராகிருதப் பட்டயச் சான்றுகளில் பிரதானமானவை:**

- சிவஸ்கந்தவர்மனின் பட்டயங்கள்; சாருதேவியின் பிரிட்டிஷ் அருங்காட்சியப் பட்டயங்கள், குமார விஷ்ணுவின் சேந்தலூர்ப் பட்டயங்கள்.

**சமஸ்கிருதப் பட்டயங்களில் குறிப்பிடத்தக்கவை:**

- விஜயஸ்கந்தவர்மனின் ஓங்கோடு பட்டயங்கள்; யுவமகாராஜன் விஷ்ணுகோபனின் உருபல்வே பட்டயங்கள்; சிங்கராய கொண்டான் பட்டயங்கள்; விஷ்ணுகோபவர்மனின் கூரம் பட்டயங்கள்; முதலாம் நந்திவர்மனின் உதயேந்திரம் பட்டயம்; வேசந்தா பட்டயங்கள்; ஓங்கோடு பட்டயங்கள்; மங்கதூரா பட்டயங்கள்.

**சமஸ்கிருத தமிழ் பட்டயங்களில் பிரபலமானவை:**

- முதலாம் பரமேஸ்வரவர்மனின் கூரம் பட்டயங்கள், இரண்டாம் நந்திவர்மனின் காசிக்குடி, கொற்றங்குடி, உதயேந்திம் பட்டயங்கள், மூன்றாம் நந்திவர்மனின் வேலூர்பாளையம் பட்டயங்கள்; நிருபதுங்கவர்மனின் பாகூர் பட்டயங்கள் இப்பட்டயங்கள் சமஸ்கிருதம், தமிழ் கலந்த கிரந்தப் பட்டயங்களாகும்.

**கல்வெட்டுச் சான்றுகள்**

- பட்டயச் சான்றுகளைப் போன்றே கல்வெட்டுப் பொறிப்புகளும் பல்லவரது தோற்றம் மற்றும் பல்லவ மன்னர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றன. கல்வெட்டுச் சான்றுகளில் குறிப்பிடத்தக்கவை.
- அமராவதி சமஸ்கிருத கல்வெட்டு, ராஜசிம்மனது வயலூர் தூண் கல்வெட்டுகள், கங்கர், சாளுக்கியர், பாண்டியர், ராஷ்டிர கூடர் கல்வெட்டுகள், சமுத்திர குப்தரது அலகாபாத் தூண் கல்வெட்டு, ஜூனாகத் கல்வெட்டு, இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு, சிம்மவர்மனின் மஞ்சி கல்லுக் கல்வெட்டுகள், சயாம் கல்வெட்டு, தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் மாமல்லபுரம், மாமண்டூர், தளவானூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**இலக்கியச் சான்றுகள்**

- பெரியபுராணம், பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தம், திருமங்கை ஆழ்வாரின் பரமேஸ்வர விண்ணகரப் பதிகம் நியாயப் பிரவேசம், பாரவியின் கிரதார் ஜூனியம், தண்டியின் அவந்தி சுந்தரி கதாசாரம், மகாவம்சம், யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள்.

- பல்வர்களின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவர்கள் பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சாதவாகனர்களின் கீழ் ஆட்சி அலுவலர்களாக இருந்தவர்கள் என்றும், தொண்டை மண்டலத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் கூறுவர்.
- கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவர்கள் தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி செய்தனர்.
- பல்லவ மரபை, முற்காலப் பல்லவர், இடைக்கால பல்லவர் மற்றும் பிற்கால பல்லவர் என பிரித்துக் கூறுவர்.
- **முற்காலப் பல்லவர்கள்** கி.பி 250 முதல் பி.பி. 350 வரை ஆட்சி செய்தனர். சிவஸ்கந்தவர்மன், விஜயஸ்கந்தவர்மன் ஆகியோர் இம்மரபில் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்கள் பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்.
- **இடைக்கால பல்லவர்கள்** கி.பி. 350 முதல் கி.பி 550 வரை ஆட்சி புரிந்தனர். இம்மரபில் விஷ்ணுகோபன் குறிப்பிடத்தக்கவராவார். இவர்கள் வடமொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்.
- **பிற்காலப் பல்லவர்கள்** கி.பி. 575 முதல் ஒன்பதாம் நூற்றாண்டில் அவர்கள் வீழ்ச்சியடையும் வரை ஆட்சி புரிந்தனர்.
- இவர்கள் **வடமொழி, தமிழ்மொழி** ஆகிய இரண்டு மொழிகளிலும் பட்டயங்களை வெளியிட்டனர்.
- **சிம்ம விஷ்ணுவின்** தலைமையில் பல்லவர்கள், களப்பிரர்களை தோற்கடித்து வடதமிழ்நாடாகிய தொண்டை மண்டலத்தில் தமது ஆட்சியை நிறுவினர். பல்லவர்களின் தலைநகரம் **காஞ்சிபுரம்** ஆகும்.
- சிம்ம விஷ்ணு காலம் முதல் பிற்கால பல்லவர்களின் வரலாறு துவங்குகிறது.
- சிம்ம விஷ்ணு களப்பிரர்களை வென்று தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆட்சியை நிறுவினர்.
- பல்லவ அரசை ஒரு பேரரசாக மாற்றிய பெருமை சிம்ம விஷ்ணுவையே சாரும்.
- சிம்ம விஷ்ணுவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களில் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.
- பல்லவர்கள் முதன்முதல் பிராகிருத மொழியில் சாசனங்களைப் பொறித்து வந்தனர் (கி.பி. 250 – 350). பிறகு சமஸ்கிருத மொழியில் செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் பொறிக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் கிரந்த – தமிழ் எழுத்தில் எழுதப்பட்டன.
- பல்லவரின் அரசியல் முறைகள் ஆதியில் சாதவாகனரின் அரசியல் முறைகளுடனும், கௌடிலியரின் அர்த்தசாத்திரக் கோட்பாடுகளுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பல்லவருடைய பண்பாடுகள் பலவும் தமிழ் மன்னருடைய பண்பாடுகட்கு முற்றிலும் முரண்பாடாகக் காணப்பட்டன.
- சாதவாகனரின் ஆட்சி குன்றிவரும் போது பல்லவர்கள் தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு முன்பு அவர்கள் சாகர்களுடன் இணைந்திருந்து மேற்கிந்தியப் பகுதிகளிலும், சிந்து வெளியிலும், ‘பஹ்வலர்’ அல்லது ‘பார்த்தியர்’ என்ற பெயரில் குடியேறி வாழ்ந்து வந்தார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.
- காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயிலில் யானையின் மத்தகத்தைப் போன்று வடிவமைக்கப்பட்ட உருவம் ஒன்று மணிமுடி சூடிய கோலத்தில்

தீட்டப்பட்டுள்ளது. இதைக் கொண்டு பல்லவர்கள் பார்த்தியர்களைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறுவர்.

- ஏனெனில், இந்தோ பாக்டிரிய மன்னனான **டெமிட்டிரியஸ்** என்பான் ஒருவனுடைய உருவம் அவனுடைய நாணயம் ஒன்றின்மேல் இத்தகைய முடியுடன் காட்சியளிக்கின்றது.
- பல்லவர்கள் வாகடாகர்களுள் ஒரு பிரிவினர் என்றும், வாகடாகர்களைப் போலவே பல்லவர்களும் தம்மைப் பார்த்து வாசக் கோத்திரத்தினராக கூறிக்கொள்கின்றனர் என்றும், இவர்கள் இரு பிரிவினருமே பிராமணக் குலத்தினர் என்றும், பல்லவரைச் சார்ந்த வீரகூர்ச்சா என்பார் ஒருவர் நாக கன்னிகை ஒருத்தியை மணந்தார் என்றும் கூறுவர்.
- சோழன் வெள்வேற் கிள்ளிக்கும் பீலிவளை என்ற நாககன்னிகைக்கும் தொண்டைமான் இளந்திரையன் பிறந்தார். அவனுடைய பெயரினால் தொண்டை மண்டலம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வரலாற்றை மணிமேகலை தருகின்றது.
- தளவானூர்க் குகைக் கல்வெட்டுகளில் மகேந்திரவர்ம பல்லவனே 'தொண்டை' மாலை அணிந்தவன் எனக் குறிப்பிடப்படுகின்றான். பல்லவர்கள் சாதவாகனரின் கீழ்க் குறுநில மன்னராகவும், ஆட்சி அலுவலராகவும் செயற்பட்டு வந்தனர் என்றும், 'பல்லவர்' என்னும் சொல்லும் தொண்டையர் என்னும் சொல்லும் ஒரு பொருளையே குறிக்குமென்றும், சாதவாகனப் பேரரசு வீழ்ச்சியுற்ற பிறகு இப்பல்லவர்கள் காஞ்சிபுரத்தில் தம் பெயரில் ஆட்சிப் பரம்பரையொன்றைத் தொடங்கினர் என்றும், அதன் பின்னர்த் தொண்டையர் என்னும் பெயர் மறைந்து பல்லவர் என்னும் பெயருக்கு இடங்கொடுத்தது என்று டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் கருதுவார்.
- பல்லவர்கள் தொண்டை மண்டலத்திலேயே தோன்றியவர்கள் என்னும் கொள்கைக்கும் போதிய சான்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. மோரிய மன்னன் அசோகனின் குடி மக்களுள் புலிந்தர் என்றோர் இனத்தவரும் இருந்தனரென அப்பேரரசனின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.
- தொண்டை மண்டலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. முதல் நூற்றாண்டு வரையில் மிகவும் புகழ்பெற்று விளங்கியதற்கு மணிமேகலை சான்று பகர்கின்றது.
- சாதவாகனரின் ஆட்சி கி.பி. 225 –ல் வீழ்ச்சியுற்றது. அவர்களுக்குப் பின்னர் காஞ்சிபுரத்தில் பல்லவரே முழு ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர். நாளடைவில் அவர்களுடைய ஆட்சியானது காஞ்சிபுரத்திலிருந்து வடக்கில் கிருஷ்ணா நதிவரையில் பரவிற்று.
- மயிதவொளு, ஹூரஹதஹள்ளி என்னும் ஊர்களில் கிடைத்துள்ள சிவஸ்கந்தவர்மனின் பிராகிருத மொழிச் செப்பேடுகளில் இதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன. சாதவாகனருடன்தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் பல்லவர்கள் பிராகிருத மொழியிலும், சமஸ்கிருத மொழியிலும் பயிற்சி மிக்கவர்களாக இருந்தனர். அம்மொழிகளிலேயே சாசனங்களையும் பொறித்து வைத்தனர். ஆகவே, பல்லவர்கள் சாதவாகனரின் குலத்தைச் சார்ந்தவர்கள் என ஊகிக்கவும் இடமுண்டு.
- சிவஸ்கந்தவர்மன் கி.பி. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சிபுரத்தினின்றும் அரசாண்டார். அப்போது அவருடைய அரசு வடக்கே கிருஷ்ணா நதியிலிருந்து தெற்கில் தென்பெண்ணைவரையில் பரவியிருந்தது. அதன் காலத்திய சாசனங்கள் பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்டன.

- ஸ்கந்தவர்மன் வழிவந்தவர் விஷ்ணுகோபன். அவர் ஏறத்தாழ கி.பி. 350 – 375 ஆண்டுகளில் ஆட்சி புரிந்தவர்.
- சமுத்திரகுப்தன் என்ற மோரிய மன்னனிடம் தோல்வியுண்ட பன்னிரண்டு தட்சிணாபத அரசருள் விஷ்ணுகோபனும் ஒருவர்.
- சமுத்திரகுப்தன் கைகளில் விஷ்ணுகோபன் தோல்வியுற்ற பிறகு காஞ்சிபுரத்து அரசியலில் பெருங்குழப்பமும் சிக்கல்களும் ஏற்பட்டன. குமாரவிஷ்ணு என்பவன் மிகவும் முயன்று காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினார் என்று வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.
- பல்லவர் பம்பரையில் சிம்மவர்மன் என்பவர் கி.பி. 436 ல் அரசுகட்டில் ஏறினார்.
- இவனுடைய ஆட்சிக்குப்பிறகு இரண்டாம் சிம்மவர்மன் மணிமுடி தரித்துக் கொண்டான் (கி.பி.575).
- அவர் காலத்தில், தொடக்க முதல் இறுதிவரையில் நாட்டில் களப்பிரர் படையெடுப்பினால் கலகமும் கிளர்ச்சியும் குழப்பமும் மேலிட்டன.

## சிம்மவிஷ்ணு

- இரண்டாம் சிம்மவர்மனின் மகன் சிம்மவிஷ்ணு என்பவர் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசுரிமை ஏற்றார்.
- பல்லவ காலத்திய இலக்கிய வளர்ச்சியும், பண்பாட்டு மேம்பாடும், அரசியல் விரிவும் சிம்மவிஷ்ணுவின் காலத்திலிருந்தே தொடங்குகின்றன. இவன் களப்பிரரையும் சேர, சோழ, பாண்டிய மன்னரையும், மாளவரையும், சிங்களவரையும் வென்று வாகை சூடினார் என்று காசக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.
- இவருடைய அரசாட்சியானது தெற்கில் கும்பகோணம் வரையில் விரிவுற்று நின்றது. இவருடைய அரசவைப் புலவரான பாரவி என்பார் ‘கீரதார்ச்ஜுனியம்’ என்னும் வடமொழிக் காவியத்தை இயற்றினார். சிம்மவிஷ்ணுவின் உருவமும், இவருடைய பட்டத்தரசிகள் இருவரின் உருவமும் மாமல்லபுரத்தில் புடைப்போவியங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

## முதலாம் மகேந்திரவர்மன்

- சிம்மவிஷ்ணுவுக்குப் பிறகு அவர் மகன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600-630) பட்டத்துக்கு வந்தார். இவனுக்கு விசித்திரசித்தன் என்றொரு விருது பெயருமுண்டு.
- காஞ்சிபுரத்தையடுத்துள்ள புள்ளலூர் என்ற இடத்தில் மகேந்திரவர்மன் சாளுக்கியரை அழித்தார் என்று காசக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இவன் சேத்தகாரி (கோயில் கட்டுபவன்), மத்தவிலாசன் (இன்பம் விரும்புபவன்), சித்திரகாரப் புலி (ஓவியர்க்குப் புலி), சத்ருமல்லன், கலகப்பிரியன், சங்கீரனஜதி, குணபரண், சத்திய சந்தன் என்ற விருதுகள் சிலவற்றையும் மேற்கொண்டார்.
- ஒரே பாறையில் குடைந்து கோயில்கள் அமைக்கும் சிற்ப மரமானது தமிழகத்தில் முதன்முதலில் மகேந்திரவர்மனால் தோற்றுவிக்கப்பெற்றது.
- புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி, பல்லாவரம், செங்கற்பட்டுக்கு அண்மையிலுள்ள வல்லம், மாமண்டூர், தளவானூர்,

சீயமங்கலம், மகேந்திரவாடி ஆகிய இடங்களிலும் இவர் குகைக்கோயில்கள் குடைந்துள்ளார்.

- அக்கோயில்களில் அவர் பொறிப்பித்த கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. 'செங்கலின்றி, மரமின்றி, உலோகமின்றி, காரையின்றிப் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய தெய்வங்களுக்கு விசித்திரசித்தன் இக்கோயிலை ஆக்கினான்' என்று இவருடைய மண்டகப்பட்டுக் கல்வெட்டு வியந்து கூறுகின்றது.
- மகேந்திரவர்மன் மகேந்திரவாடி ஏரியைக் கட்டி உழவுக்கு உதவினார். சிற்பத்திலும் ஓவியத்திலும் மட்டுமன்றி இசையிலும் இவ்வேந்தன் வல்லுநராக இருந்தார்.
- **பரிவதினி** (Parivadhini) என்ற வீணை வாசிப்பில் இவர் வல்லவராக விளங்கினார்.
- இவனுடைய இசைப் புலமைக்குக் குடுமியான் மலைக்கல்வெட்டுச் சான்று எனச் சிலர் கருதுகின்றனர்.
- மகேந்திரவர்மன் ஆதியில் சமணனாக இருந்தார். திருநாவுக்கரசரிடம் ஈடுபாடுகொண்டு பிறகு சைவ சமயத்தைத் தழுவினார். இவர் சிவலிங்க வழிபாடு உடையவர் என்று திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு கூறுகின்றது. தான் சைவனான பிறகு பாடலிபுத்திரத்தில் (திருப்பாதிரிப்புலியூரில்) இருந்த ஒரு சமணப் பள்ளியை இடித்து அக்கற்களைக் கொண்டே திருவதிகையில் குணபர ஈஸ்வரம் என்ற சிவாலயத்தை கட்டினார்.

**யுவாங் சுவாங்: இவர் பல்லவர் தலைநகர் காஞ்சிபுரத்திற்கு வருகைபுரிந்த சீனப்பயணி. இவரது கூற்றுப்படி காஞ்சிபுரம் சுமார் 6 மைல் சுற்றளவைக் கொண்டது. அங்கு 100க்கும் மேற்பட்ட புத்த மடங்களும் பல சமணக் கோயில்களும் இருந்தன.**

**காஞ்சி தென்னிந்தியாவிலேயே மிகச்சிறந்த கல்வி மையமாகத் திகழ்ந்தது. வத்சாயனர் காஞ்சியில் வாழ்ந்த பண்டிதர். தருமபாலர் காஞ்சியிலிருந்து நாளந்தாவிற்குச் சென்றவர். தண்டி "தண்டி அலங்காரம்" என்னும் இலக்கண நூலை எழுதியவர். இவர் காஞ்சியில் வாழ்ந்த வட இந்தியப் புலவர்**

### முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668):

- மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவர் மகன் முதலாம் நரசிம்மவர்மன் அரியணையேறினார். சாளுக்கியரின் மேல் அவர் பல வெற்றிகளைக் கொண்டார்.
- மணிமங்கலத்தில் ஒரு முறையும், வாதாபியில் இரு முறையும் அவர் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் மேல் போர்தொடுத்து மாபெரும் வெற்றி பெற்றதால் வாதாபி கொண்டான் எனப் புகழப் பட்டார்.
- இரண்டாம் வாதாபிப்போர் வரலாற்று புகழ்பெற்றதாகும். அப்போரை நடத்தி வெற்றிவாகை சூடி வந்த படைத் தலைமையர் பரஞ்சோதியே, பிறகு சிறுத்தொண்ட நாயனராகத் திருதொண்டத் தொகையில் இடம் பெற்றார்.

- முதலாம் நரசிம்மவர்மனிடம் மாபெரும் கடற்படை ஒன்று இருந்தது. அவர் தன் நண்பன் மானவர்மன் என்ற சிங்கள மன்னனுக்கு இலங்கையின் அரசுரிமையை வழங்கினான் (கி.பி. 631).
- இவர் காலத்தில் சீன யாத்திரிகர் யுவான்-சுவாங் காஞ்சிபுரத்துக்கு வந்திருந்தார் (கி.பி. 640).
- நாளந்தாப் பல்கலைக் கழக ஆசிரியர் தருமபாலர் என்பார் காஞ்சிபுரத்திலிருந்து பயின்று சென்றவர்தாம்.
- இவரின் பட்டப்பெயர்கள் மாமல்லன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, வாத்ய வித்யாதரன் ஆகும்.

**இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி. 668 - 670)**

- முதலாம் நரசிம்மவர்மனுக்குப் பின்னர் அவர் மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் பல்லவ அரசனாக முடிசூட்டிக் கொண்டார்.
- இவர் ஈராண்டுகளே அரசாண்டார் (கி.பி. 668-670). அவர் வருணாசிரம தருமத்தை நிலை நாட்டினார் எனவும், கடிகைகளை வளர்த்தார் எனவும் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.
- அவர் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனுடன் போரில் ஈடுபட்டிருந்தார் என்று அறிகின்றோம்.

**முதலாம் பரமேஸ்வரன் (கி.பி. 670 - 695)**

- இரண்டாம் மகேந்திரனுக்குப் பின்பு அவருடைய மகன் முதலாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 670-695) அரசாண்டார். சாளுக்கிய மன்னன் தொடர்ந்து பல்லவருக்குத் தொல்லை கொடுக்கலானார்.
- சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் கைகளில் பரமேசுவரவர்மன் தோல்வியுற்றார் எனவும், பல்லவ குடும்பத்தையே சாளுக்கியர்கள் வேரறுத்துவிட்டனர் எனவும் விக்கிரமாதித்தனுடைய கடவால் செப்பேடுகள் (கி.பி. 674) தெரிவிக்கின்றன.
- ஆனால் பல்லவருடைய சாசனக் குறிப்புகள் கடவால் செப்பேடுகள் கூறும் செய்திக்கு முற்றிலும் முரணாகக் காணப்படுகின்றன.
- திருச்சிக்கு அண்மையில் பெருவளநல்லூரில் பல இலட்சம் சேனையுடன் போராடிய விக்கிரமாதித்தனைப் பல்லவ மன்னன் வென்று, அச்சாளுக்கிய மன்னன் சுற்றிய கந்தையுடன் போர்க்களத்திலிருந்து ஓடச் செய்தார் என்று கூரம் செப்பேடுகள் கூறுகின்றன.

**இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி. 695 - 722)**

- முதலாம் பரமேசுவரவர்மனுக்குப் பிறகு அவர் மகன் இரண்டாம் நரசிம்மவர்மன் (இராசசிம்மன்) (கி.பி. 695-722) மணிமுடி சூட்டிக்கொண்டார்.
- இவருடைய கல்வெட்டுகள் அனைத்திலும் சமஸ்கிருதத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளன.
- சிறப்புப் பெயர்கள்: இராசசிம்மன், சங்கரபத்தன், ஆகமப்பிரியன்.
- சீன தேசத்துக்குத் தூது ஒன்றை அனுப்பிப் படைத்துணை பெற்றுத் திபேத்தின்மேல் போர்தொடுத்தார்.

- தண்டி என்ற வடமொழிப்புலவர் தமிழின் அணியிலக்கணம் ஒன்றை இயற்றியுள்ளார். அது அவர் பெயராலேயே ‘தண்டியலங்காரம்’ என்று வழங்கி வருகின்றது.
- மாமல்லபுரம் நகரமே இவர் காலத்தில் அமைக்கப்பட்டதுதான்.
- அங்கு ஒரே பாறையில் குடையப்பட்டுள்ள கோயில்களும் சிற்பங்களும் கடற்கரைக் கோயிலும் இவர் காலத்தில் செதுக்கப்பட்டவையேயாம்.
- காஞ்சிபுரத்தில் இவர் எழுப்பிய கைலாசநாதர் கோயிலாகும்.
- திருத்தொண்டத்தொகையில் கழற்சிங்க நாயனராகச் சேர்க்கப்பட்டுள்ள மன்னன் இந்நரசிம்மவர்ம பல்லவன்தான்.

**இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 730- 795)**

- இரண்டாம் நரசிம்மவர்மனுக்குப் பிறகு அவர் மகன் இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 722-730) பட்டமேற்றார். கங்கபாடி நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற போது விளாத்தி என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார்.
- சிம்ம விஷ்ணுவின் மரபில் வந்த பல்லவ மன்னர் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் என்ற பெயரில் அரசுகட்டில் ஏறினார் என்று (கி.பி. 730-795). வைகுண்டப் பெருமாள் கோயில் கல்வெட்டு ஒன்று இச்செய்தியைத் தெரிவிக்கின்றது.
- திருமங்கையாழ்வார் இவர் காலத்தில் வாழ்ந்தவர். நந்திவர்மன் அறுபத்தைந்து ஆண்டுகள் அரசாண்டார்.
- இவருடைய அறுபத்தொன்றாம் ஆண்டில் பொறித்துக் கொடுக்கப்பட்ட பட்டத்தாள்மங்கலம் செப்பேடுகள் இவருடைய தந்தையின் பெயர் இரணியவர்மன் என்றும், இவர் இளமையிலேயே முடிசூட்டப்பெற்றான் என்றும் தெரிவிக்கின்றன.
- இவருடைய 21 ஆம் ஆண்டில் வெட்டிக் கொடுக்கப்பட்ட காசக்குடிச் செப்பேடுகள் இவர் சிம்ம விஷ்ணுவின் இளவல் என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரமேசுவர போத்தராசாவின் நாட்டையே ஆண்டு வந்தார் என்றும் தெரிவிக்கின்றன.
- உதயேந்திரம் செப்பேடுகளில் எழுதப்பட்டுள்ள மெய்க்கீர்த்திக் கவிதையை இயற்றியவர் மேதாவிகுலத்து உதித்த பரமேசுவர கவி என்பவனாவார்.

**தந்திவர்மன் (கி.பி. 796 - 840)**

- இரண்டாம் நந்திவர்மனுக்கு பின் அவர் மகன் தந்திவர்மன் மணிமுடி சூட்டிக்கொண்டார் (கி.பி. 796-840).
- வடக்கில் இராஷ்டிரக்கூடரின் செல்வாக்கு உயர்ந்து வந்து கொண்டிருந்தது.
- பல்லவர்க்கு அவர்களுடன் நல்லுறவு கிடையாது. தெற்கே விஜயாலய சோழனின் பரம்பரை தொடங்கிவிட்டது.
- பல்லவ அரசின் பண்டைய புகழ் ஒளி மங்கலாயிற்று.

**மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 846 - 869)**

- தந்திவர்மனின் மனைவி கதம்ப குலத்தவளான அக்களநிம்மடி என்பவள் வயிற்றில் பிறந்தவர் மூன்றாம் நந்திவர்மன்.

- தந்திவர்மனுக்குப் பிறகு இவரே அரியணை ஏறினார் (கி.பி. 846-69).
- மூன்றாம் நந்திவர்மன் சிறந்த போர்த்திறம் படைத்தவர்.
- நந்தி போத்தரசன், நந்தி விக்கிரமவர்மன், விசயநந்தி விக்கிரமவர்மன், காவிரி நாடன், கழல் நந்தி, கடற்படை அவனி நாராயணன் என்று பல பெயர்கள் இவருக்கு உண்டு.
- நந்திக் கலம்பகத்தில் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப் பாராட்டப்படுபவர் இவரே யாவார்.
- தெள்ளாற்றல் மட்டுமின்றி, வெள்ளாறு, கடம்பூர், வெறியலூர், தொண்டி, பழையாறு ஆகிய இடங்களில் தன் பகைவரைப் பொருது வெற்றிகண்டவர் இவர் என நந்திக் கலம்பகம் கூறுகின்றது.
- கொங்கு நாடும், சோழ நாடும் இவருக்குத் தோற்று அடிபணிந்தனவாகையால் இவருக்குக் 'கொங்கன்' என்றும் 'சோணாடன்' என்றும் விருதுகள் எய்தின.
- மூன்றாம் நந்திவர்மன் கி.பி. 862 ஆம் ஆண்டளவில் இரண்டாம் வரகுண பாண்டியனுக்குத் துணையாக இலங்கை மன்னன்மேல் போர் தொடுத்தார்.
- இவருக்குப் பக்கபலமாக நின்று அப்போரை நடத்திக் கொடுத்தவர் இளவரசன் நிருபதுங்கன் ஆவார்
- மூன்றாம் நந்திவர்மன் நந்திக் கலம்பகத்தில் அவனி நாராயணன் என்றும், ஆட்குலாம் கடற்படை அவனி நாரணன் என்றும், நுரை வெண்திரை நாற்கடற்கு ஒரு நாயகன் என்றும் பாராட்டப் பெறுகின்றார்.
- மல்லையிலும் மயிலையிலும் துறைமுகங்கள் அமைந்திருந்தன.
- இப்பல்லவ மன்னன் கடல் கடந்து சென்று அயல்நாடுகளுடன் தொடர்புகொண்டிருந்தார் என்பது விளக்கமாகின்றது.

**பல்லவ அரசின் முடிவு:**

- மூன்றாம் நந்திவர்மனையடுத்து அவர் மூத்த மகன் நிருபதுங்கன் முடிசூட்டிக்கொண்டார்.
- இவருடன் பிறந்த தம்பியின் பெயர் கம்பவர்மன் என்பது, இவருடைய மாற்றாந்தாய் வயிற்றுப் பிறந்த அபராஜிதன் நிருபதுங்கன் மேல் அரசுரிமைப்போர் தொடுத்து அவர்மேல் திருப்புறம்பியம் என்ற இடத்தில் வெற்றி கண்டார் (கி.பி. 895).
- அபராஜிதனின் ஆட்சி பதினெட்டு ஆண்டுகள் நீடித்தன, அவருடைய செல்வாக்குத் தொண்டைமண்டலத்தின் தென்பகுதி வரையில் எட்டி இருந்தது.
- தொண்டைமண்டலம் சோழரின் பிடியில் சிக்குண்டிருந்தது.
- அபராஜிதனை ஆதித்த சோழன் பின்னர் நடைபெற்ற ஒரு போரில் கொன்றார் (கி.பி. 903) என்ற செய்தியை வீரராசேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டு ஒன்றினால் அறிகின்றோம்.
- இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இப்போரைக் குறிப்பிடுகின்றன.
- பிறகு பல்லவ அரசானது சிறுசிறு தலைவர்களின் கைக்கு மாறி இறுதியில் கி.பி. 949 –ல் தன்நிலை தடுமாறித் திறன் குன்றி மறைந்து போயிற்று.
- கற்பாறை மீது தீட்டப்பட்ட ஓவியங்கள் சில பல்லவர், பாண்டியர் கோயில்களில் காணப்படுகின்றன.

- இவை யாவற்றிற்கும் வழிகாட்டியாயிருந்தவர் விசித்திரசித்தன் என்ற புகழ்பெற்ற முதலாம் மகேந்திரவர்மப் பல்லவனே எனக் கருதலாம்.
- மாமண்டூர்க் குகைக்கோயிலிலுள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட ‘தட்சிணசித்தர்’ என்னும் ஓவிய நூலைப் படைத்தவர் மகேந்திரனே ஆவார் எனக் கருதலாம். அவருக்கு ‘சித்திரகாரப் புலி’ என்ற விருதும் உண்டு.

**பல்லவ ஆட்சிமுறை**

- பல்லவப் பேரரசானது மண்டலம், கோட்டம், நாடு, ஊர் என பல ஆட்சிப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- பல்லவப் பேரரசின் மிகப்பெரிய ஆட்சிப்பிரிவு **மண்டலம்** அல்லது ராஷ்டிரம் எனப்படும். இது இளவரசனின் கட்டுப்பாட்டில் தன்னாட்சி பெற்று விளங்கியது.
- மண்டலங்கள் பல விஷயங்களாகவும் (கோட்டங்களாகவும்), விஷயங்கள் பல நாடுகளாகவும், நாடுகள் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டன.
- பல்லவ ஆட்சி முறையின் மிகச்சிறிய ஆட்சிப்பிரிவு **ஊர்** அல்லது **கிராமம்** என்பதாகும்.
- நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம் ஆகும். கிராமத்தை நிர்வகிக்க **“ஊர் அவை”** இருந்தது.
- மைய அரசின் தலைவராக மன்னர் விளங்கினார். மன்னருக்கு உதவியாக அமைச்சர்களும், செயலர்களும் இருந்தனர்.
- பல்லவ அரசின் அமைச்சர்கள் **அமாத்தியர்கள்** எனப்பட்டனர். அவர்களுக்கு உத்தமசீலன், பிரம்மராஜன், பேரரையன் போன்ற விருதுகளும் கொடுக்கப்பட்டன.
- பல்லவ அரசில் மூன்று வகையான நீதிமன்றங்கள் இருந்தன. உச்ச நீதிமன்றம் தர்மசேனா எனப்பட்டது. இதற்கு அரசனே தலைமை வகித்தார்.
- நகர நீதிமன்றங்கள் **அதிகரணங்கள்** என்றும், கிராம நீதிமன்றங்கள் **கரணங்கள்** என்றும் அழைக்கப்பட்டன.
- நிலவரியே அரசின் முக்கிய வருவாயாக இருந்தது. இது தவிர வேறு பல வரிகளும் வசூலிக்கப்பட்டன. இவை **காணம், இறை** என்று அழைக்கப்பட்டன.
- அரசாங்க கருவூலத்தை **குமரன் பண்டாரம்** என்ற அதிகாரி நிர்வகித்து வந்தார்.
- பல்வலர்கள் ஆட்சி காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் சிறந்து விளங்கின. சோழர்களின் கிராம ஆட்சி முறைக்கு பல்லவர்கள் வழிகாட்டியாக விளங்கினர்.

**சமூக நிலை**

- பல்லவர்கள் காலத்தில்தான் பக்தி இயக்கம் தோன்றி வளர்ந்தது.
- பல்லவர் கால சமுதாயம் பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது.
- பிராமணர்கள் **அக்ரஹாரம்** எனப்பட்ட தனிப்பகுதிகளில் வாழ்ந்தனர். பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகள் **பிரம்மதேயங்கள்** என்று பெயர்.
- கோயில்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு **தேவதானம்** என்று பெயர்.

- சூத்திரர்களை பல்லவர் கால இலக்கியங்கள் புலையர் என்றும், சண்டாளர் என்றும் குறிப்பிடுகின்றனர்.
- பல்லவர் கால சமுதாயத்தில் ஆடல் மகளிர் தனிப்பிரிவாகக் காணப்பட்டனர்.

**பொருளாதார நிலை**

- தலைநகரமான காஞ்சிபுரம் முக்கிய வணிக நகரமாகவும் திகழ்ந்தது. வணிகர் சங்கம் மணி கிராமம் என்று அழைக்கப்பட்டது. அயல் நாட்டு வணிகர்கள் நானாதேசிகர் என்று அழைக்கப்பட்டனர்.
- நிலங்கள் **உழவு, நிவர்த்தனம்** அல்லது **பட்டிகா, ஹாலா** என்னும் அளவுகளால் அளக்கப்பட்டன. **கலப்பை** என்பதும் ஓர் அளவுகோலாகும்.
- பல்லவர் காலத்திலும் அரிசியே முக்கிய உணவாகும்.
- தங்கத்தின் எடையை **கழஞ்சு, மஞ்சாடி** என்று குறிப்பிட்டனர்.
- முதலாம் மகேந்திரவர்மன் மாமண்டூரில் அமைத்த ஏரியின் பெயர் **சித்ர மேக தடாகம்** என்பதாகும்.

**கலை மற்றும் கட்டடக்கலை**

- பல்லவர்களே பாறைக் கட்டடக்கலையை தமிழகத்தில் அறிமுகம் செய்தவராவர்.

| | | |
|---|---|---|
| 1 | குடைவரைக் கோயில்கள் | முதலாம் மகேந்திரவர்மன் பாணி |
| 2 | ஒற்றைக்கல் இரதங்கள் | முதலாம் நரசிம்மவர்மன் பாணி |
| 3 | கட்டுமானக் கோயில்கள் | ராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பாணி |

- ஒற்றைக்கல் ரதங்களும், மண்டபங்களும், மாமல்லன் பாணிக்கோயில்கள் எனப்படுகின்றன. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் ரதங்கள் தற்காலத்தில் **பஞ்ச பாண்டவ ரதங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.
- மாமல்லன் பணி சிற்பங்களில் மிகவும் சிறப்பானது **திறந்த வெளிக் கலைக்கூடம்** என்று அழைக்கப்படும் பாறைச் சிற்பமாகும்.
- இராஜசிம்மன் காலத்தில் கட்டுமானக் கோயில்கள் அமைக்கும் வழக்கம் தொடங்கியது.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் மற்றும் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் ஆகிய இரண்டும் கட்டுமானக் கோயில்களின் தொடக்க நிலையாகும்.
- காஞ்சிபுரத்திலுள்ள வைகுண்ட பெருமாள் கோயில் இரண்டாம் நந்திவர்ம பாணி என்று அழைக்கப்படுகிறது.
- மாமண்டூர் மற்றும் குடுமியான்மலை இசைக் கல்வெட்டுகள் பல்லவர்கள் இசைக்கு அளித்த சிறப்பிடத்தை உணர்த்துகின்றன.
- முதலாம் மகேந்திரவர்மன் மற்றும் முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோர் இசையில் வல்லவர்களாக இருந்தனர்.
- சித்திரகாரப்புலி என்று போற்றப்பட்ட முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தட்சிண சித்திரம் என்ற ஓவியக்கலை விளக்கநூல் தொகுக்கப்பட்டது.

**கல்வி மற்றும் இலக்கிய நிலை**

- பல்லவர் காலத்தில் **வடமொழிக் கல்விக்கு** முன்னுரிமை அளிக்கப்பட்டாலும் தமிழ்மொழியையும் போற்றி வளர்த்தனர்.
- காஞ்சிபுரத்திலிருந்த **புத்த கடிகை** ஒரு சிறந்த கல்வி மையமாகும். மேலும் இக்கல்வி மையம் வடமொழிக் கல்விக்கும் பெயர்பெற்று விளங்கியது. **யுவான் சுவாங், தர்மபாலர் போன்ற அறிஞர்கள் இங்கு கல்வி பயின்றனர்.**
- முதலாம் மகேந்திரவர்மன் **பிரகாசனம்** மற்றும் **பாகவத வியூகம்** ஆகிய வடமொழி நூல்களை இயற்றினார்.
- **தண்டி** என்பவர் **காவிய தரிசனம்** மற்றும் **அவந்தி சுந்தரி கதாசாரம்** ஆகிய நூல்களை இயற்றினார்.
- பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும், பக்திப் பாடல்களை தமிழிலேயே இயற்றினார்.
- நாயன்மார்களின் பாடல் தொகுப்பு **திருமுறை** என்றும் ஆழ்வார்களின் பாடல் தொகுப்பு **திவ்ய பிரபந்தம்** என்றும் அழைக்கப்படுகிறது.
- பாரவி என்பவர் **கிருதார்ஜுனியம்** என்ற நூலை எழுதினார்.
- பல்லவர் காலத்தில் வாழ்ந்த கல்லாடனார் **கல்லாடம்** என்ற இலக்கண நூலையும், பெருந்தேவனார் **பாரத வெண்பா** என்ற நூலையும் இயற்றினார்.
- **நந்திக்கலம்பகம்** என்ற நூலும் பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி நெறியைப் பரப்பினார்கள்.
- நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர். அவர்களில் திருநாவுக்கரசர் திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
- காரைக்கால் அம்மையார் 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார்.
- ஆழ்வார்கள் மொத்தம் பன்னிருவர் அவர்களில் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசை ஆழ்வார் ஆகிய நால்வரும் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள்.
- பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் **திருப்பாவை** மற்றும் **நாச்சியார் திருமொழி** ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

# சோழப் பேரரசு

## வரலாற்று ஆதாரங்கள்:

### கல்வெட்டு சான்றுகள்:

- கல்வெட்டுகள் தமிழ் மற்றும் வட மொழியில் உள்ளன.
- மன்னர்களின் கொடைகள் மற்றும் வீரம் பற்றிக் கூறுகின்றன.
- முதலாம் பராந்தகனின் உத்திரமேரூர் கல்வெட்டு, முதலாம் ராஜராஜனின் தஞ்சாவூர் கல்வெட்டு, வீர ராஜேந்திரனின் திருக்கூடல், கன்னியாகுமரி கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

### செப்பேட்டுச் சான்றுகள்:

திருவாலாங்காட்டுச் செப்பேடுகள் மற்றும் கரந்தைச் செப்பேடுகள், முதலாம் குலோத்துங்கச் சோழனின் வேடன் செப்பேடுகள் வரலாற்று தகவல்களை தடுக்கின்றன.

### இலக்கியச் சான்றுகள்:

சேக்கிழார் - பெரியபுராணம்
ஜெயங்கொண்டார் - கலிங்கத்துப் பரணி
ஒட்டக்கூத்தர் - மூவருலா
குலோத்துங்கன் - பிள்ளைத்தமிழ்
அமிர்தசாகரன் - யாப்பெருங்கலக்காரிகை
புத்தமித்திரன் - வீரசோழியம் போன்ற நூல்கள் சோழர் வரலாற்றை அறிய உதவுகின்றன.

### சோழப் பேரரசு:

## முற்கால சோழர்கள்:

- மகாபாரதம், அசோகரின் கல்வெட்டுகள், மெகஸ்தனிஸ் மற்றும் தாலமி ஆகியோரது குறிப்புகள் போன்றவற்றில் சோழர்களைப் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.
- சங்க காலத்தில் சோழர்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகரமாக **உறையூர்** விளங்கியது. சோழர்களது இலச்சினையாக ‘புலி’ உருவம் இடம் பெற்றது.
- முற்காலச் சோழர்களில் கரிகால சோழன் புகழ் பெற்றவர் ஆவார். இவர் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.
- முற்கால சோழர்கள் தமது இறுதிக் காலத்தில் உறையூரை மட்டுமே ஆட்சி செய்யுமளவில் சிற்றரசர்களாயினர்.
- பல்லவர்கள் ஆட்சி வீழ்ச்சியுற்ற போது சோழ அரசு மறுபடியும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

## பிற்கால சோழர்கள்

- பிற்கால சோழ அரசை உருவாக்கியவர் **விஜயாலயச் சோழன்** ஆவார்.
- இவர் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி கி.பி. 850 ல் அதை சோழ நாட்டின் தலைநகராக்கினார்.

- பிற்காலச் சோழர்களின் எழுச்சிக்கு அடித்தளமிட்டவர் விஜயாலயச் சோழன் ஆவார்.
- இவர் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி கி.பி.850 இல் அதை சோழ நாட்டின் தலைநகராக்கினார்.
- தஞ்சையை தலைநகராகக் கொண்ட பரகேசரி என்ற பட்டம் புணைந்து கொண்டார்.
- தஞ்சை கொண்ட கோப்பரகேசரிவர்மர் என்று இவரை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- தன்னுடைய வெற்றியின் சின்னமாக தஞ்சை நகரில் கொற்றவை என்ற காளிதேவி அல்லது நிசம்சூதனிக்கு ஒரு கோவில் எடுத்து வழிபட்டதாக திருவாலங்காட்டு செப்பேடுகள் தெரிவிக்கின்றன.
- தன் மேனி முழுவதும் தொண்ணூற்றாறு புண் கொண்ட புரவலன் என்று தமிழ் இலக்கியங்களில் விஜயாலயன் போற்றப்படுகிறார்.
- இதுவே பிற்காலச் சோழர்கள் ஆட்சியமைக்க அடித்தளமாக அமைந்தது.
- பிற்கால சோழ மன்னர்கள் கி.பி. 850 முதல் கி.பி 1279 வரை சுமார் 430 ஆண்டு ஆட்சி புரிந்தனர்.
- பிற்காலத்தில் இச்சோழ மரபினர் தென்னிந்தியாவின் பெரும் பகுதியையும், இலங்கை, கடாரம் (சுமத்ரா, மலேசிய பகுதிகள்) ஆகிய பகுதிகளையும் வென்றதால், இவர்கள் **பேரரசு சோழர்கள்** எனப்பட்டனர்.

**திருப்புறம்பியப் போர் : கி.பி. 895**

- இரண்டாம் வரகுணர் என்ற பாண்டிய மன்னர் முத்தரையிடமிருந்து விஜயாலயன் கைப்பற்றிய நிலப்பகுதியைப் பெறுவதற்கும் பல்லவ மன்னன் அபராஜியவர்மனைத் (அபராஜித்தன்) தோற்கடிக்கவும் திட்டம் தீட்டி போரிடத் தொடங்கினர். அபராஜிதவர்மன் கங்க மன்னர் முதலாம் பிரிதிவிபதி, விஜயாலயன் மகன் முதலாம் ஆதித்த சோழன் ஆகியோரின்ஆதரவைப் பெற்றார்.
- போர் கி.பி. 895 ல் திருப்புறம்பியம் என்ற இடத்தில் நடைபெற்றது. போரில் அபராஜிதவர்மன் வெற்றி பெற்றார்.
- இப்போரின் வெற்றிக்கு அறிகுறியாக ஆதித்த சோழன் தன் தந்தையின் பெயரால் விஜயாலய சோழீச்வரம் என்ற சிவன் கோவிலை எடுப்பித்ததாகத் தெரிகிறது.
- விஜயாலய சோழனின் மகன் **முதலாம் ஆதித்த சோழன்** (கி.பி. 871-907) கடைசி பல்லவ மன்னன் **அபராஜிதனை** ஒரு போரில் தோற்கடித்து தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினார் என கன்னியாகுமரி செப்பேடுகள் கூறுகின்றன. மேலும் கொங்கு நாட்டையும் தனது இராஜ்ஜியத்துடன் இணைத்துக் கொண்டார் என கொங்குதேச ராஜாக்கள் சரிதம் என்ற நூல் தெரிவிக்கிறது.
- கொங்கு தேசத்தில் இருந்து எடுத்து வந்த பொன்னைக் கொண்டு தில்லையம்பலத்துக்கு பொன்கூரை வேய்ந்தான் என நம்பியாண்டார் நம்பி கூறுகிறார்.
- இவருக்கு இராசகேசரி என்ற பட்டப்பெயரும் உண்டு.

## முதலாம் பராந்தகன் (கி.பி. 907-கி.பி. 955)

- தன் ஆட்சிக்காலத்தில் ஊராட்சி முறையை திருத்தியமைத்து நடைமுறை விதிகளை வரையறுத்தார் என உத்திரமேரூர் கல்வெட்டுகள் இவரைப் பற்றி குறிப்பிடுகின்றன.
- தனது தந்தையான ஆதித்த சோழனின் சமாதியில் கோதண்ட ராமேஸ்வரம் என்ற பெயருடைய கோவிலை எழுப்பினார்.
- ஆதித்த சோழனின் மகன் முதலாம் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, அதன் தலைநகரான மதுரையை வென்றதால் **"மதுரையும் ஈழமும் கொண்டான்"** என்ற பட்டம் பெற்றார்.
- இவர் வேத பாடசாலை நடத்துவதற்காக மான்யம் அளித்ததை காமபுல்லூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- இவர் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலுக்கு பொன்னால் கூரை வேய்ந்தார். இதனால் **'பொன்வேய்ந்த சோழன்'** என்று அழைக்கப்பட்டார்.
- கி.பி. 949 ல் புகழ்பெற்ற தக்கோலம் (திருவூறல்) போரில் இராஷ்டிர கூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணனிடம் இவரது மகன் இராசாதித்தன் தோல்வியுற்று மரணமடைந்தார். இச்செய்தியை லீடன் செப்பேடும் திருவாலங்காட்டு செப்பேடும் எடுத்துரைக்கின்றது.

**பட்டப்பெயர்கள்**

- மதுரை கொண்டான், மதுரையும் ஈழமும் கொண்டான், பொன்வேய்ந்த சோழன், வீர சோழன்

## கண்டராதித்ய சோழர் : 953-957

- கண்டராதித்யரின் ஆட்சி சோழ மண்டலத்தில் மட்டும் நிலைத்திருந்தது.
- கண்டராதித்யர் சிவபக்தியும், தமிழ் புலமையும் ஒருங்கே அமையப் பெற்றவர் ஆவார். சிதம்பரம் தாலுகா உடையார் குடியில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கண்டராதித்யரை மேற்கெழுந்தருளிய தேவர் என்று கூறுகிறது.
- பெங்களூர் மாவட்டத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்று இவரை சிவஞான கண்டராதித்யர் என்று குறிப்பிடுகிறது. இவரது தேவியார் செம்பியன் மாதேவி எல்லையற்ற சிவபக்தி கொண்டவர்.
- இந்த அரசி செங்கற் கோவில்களை கற்றளிகளாக எடுப்பித்தும், பல கோவில்களுக்கு நிவந்தங்கள் செய்தும், அணிகலன்கள் அளித்தும் பல அறச் செயல்கள் புரிந்துள்ளனர்.
- இவற்றில் குறிப்பிடத்தக்கது தஞ்சை மாவட்டம் திருநல்லம் என்ற கோனேரி ராஜபுரத்து சிவாலயத்தைக் கற்றளியாக எடுப்பித்து அதற்கு வழிபாட்டிற்கும், விழாக்களுக்கும் நிவந்தமாக இறையிலி நிலங்களை அளித்தது ஆகும்.

## அரிஞ்சய சோழர் : 956-957

- இவர் ஆற்றூர் துஞ்சிய தேவர் என்று அழைக்கப்படுகிறார்.
- முதலாம் ராஜராஜசோழன் இவர் நினைவாக மேல்பாடி என்ற இடத்தில் சிவாலயம் எழுப்பி அதற்கு அரிஞ்சயேச்வரம் என்று பெயரிட்டார்.

## இரண்டாம் பராந்தக சோழன் : 957-970

- இவரது கல்வெட்டுகளில் பரகேசரி என்றும், பாண்டியனை சுரம் இறக்கிய பெருமாள் என்றும் போற்றப்படுகிறார்.
- இரண்டாம் பராந்தக சோழர் கி.பி. 962-ல் சேவூர் என்ற இடத்தில் நடந்த போரில் பாண்டிய மன்னர் வீரபாண்டியனைத் தோற்கடித்தார் என்று ஆனை மங்கலச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.
- பொன்மாரிகை துஞ்சிய தேவன் என்ற பெயரும் இவருக்கு உண்டு.
- இரண்டாம் பராந்தகரின் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் சில விரோதிகளால் வஞ்சகமாக கொலை செய்யப்பட்டார். இந்தத் துயரம் பொறுக்கமாட்டாமல் சில நாட்களில் பராந்தகன் இறந்து விட்டார்.
- இவர் இறந்த போது இவரது மனைவி வானவன் மாதேவி உடன்கட்டை ஏறி உயிர் நீத்தாள் என்று திருவாலாங்காட்டு செப்பேடுகள் தெரிவிக்கின்றன.
- வீரசோழியம் என்ற தமிழ் இலக்கண நூலில் இரண்டு பாடல்கள் இந்த அரசரின் சமயப் பொறை, தமிழ் புலவர்களை ஆதரித்தது ஆகியவை பற்றிக் கூறுகின்றன.
- பராந்தக சோழரின் ஆட்சிக்காலத்தில் பழைய தலைநகரமான பழையாறை பல சிற்றூர்களைத் தன்னகத்தே கொண்ட பெரிய தலைநகராக விளங்கியது.
- இந்த பழையாறை நகரம் நந்திபுரம் என்றும்முடிகொண்ட சோழபுரம் என்றும் அழைக்கப்பட்டது.

## உத்தம சோழன் : 970-985

- இவர் பரகேசரி என்ற பட்டம் புனைந்திருந்தார். நடுவில் புலி உருவத்தோடு கிரந்த மொழியில் உத்தமசோழர் என்ற பெயர் பொறிக்கப்பட்ட இவரது தங்க நாணயம் கிடைத்துள்ளது.
- சோழ மன்னரின் நாணயங்களில் இதுவே பழமையானது என்று சர்வால்டர் எலியட் என்பவர் கருதுகிறார்.

## முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி. 985-கி.பி. 1014)

- திருவாலாங்காடு செப்பேடுகள் இவரைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. இவர் சோழர் குலத்தின் வலிமை மிக்க மன்னராவார்.
- இவர் இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தாவை வென்று அனுராதபுரத்தையும் இலங்கையின் வட பகுதியையும் கைப்பற்றினார்.
- **புலனருவா** நகரைப் புதிய தலைநகராக்கினார். அங்கு **வாளவன் மாதேவீச்சுரம்** என்ற சிவன் கோயிலையும் கட்டினார்.
- முந்நீர் பழந்தீவுகள் எனப்பட்ட மாலத் தீவுகளையும் வென்றார். இவர் காலத்தில் சோழப்பேரரசின் பரப்பு தென்னிந்தியாவையும் கடந்து பரந்து விரிந்திருந்தது.
- இவர் சேரமன்னன் பாஸ்கரவர்மனை காந்தளுர் சாலை (திருவனந்தபுரம்) என்னுமிடத்தில் வென்றார்.

- இவர் கல்யாணியை ஆண்ட சத்ய சரயாவிடமிருந்து வெங்கியைக் கைப்பற்றி சக்திவர்மனுக்கு அளித்தார்.
- இவர் தமது மகள் குந்தவையை சக்திவர்மனின் (கீழை/வெங்கி சாளுக்கியர்) சகோதரர் விமலாதித்தனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.
- கங்கவாடி, தடிகைபாடி, நொளம்பாடி ஆகிய மைசூரின் பகுதிகளையும், ரெய்ச்சூர் தோஆப் பகுதியையும் வென்றார்.
- தமது ஆட்சியின் முக்கிய நிகழ்வுகளை தமிழ்மொழியில் கல்வெட்டில் பொறிக்கும் மெய்கீர்த்தி எனப்படும் முறையை அறிமுகம் செய்தார்.
- இவரின் மெய்கீர்த்திகள் அனைத்தும் மன்னரின் பெயரின் முன்பு **"காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளிய"** என்னும் அடைமொழியைக் கொண்டே தொடங்குகின்றன.
- இவர் தமது ஆட்சிக் காலத்தில் நில அளவை முறையை அறிமுகப்படுத்தினார். இவர் காலத்தில் வேதம் (ம) இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதி பற்றி அணியூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- இவர் நாகப்பட்டினத்தில் புத்த மடாலயம் கட்ட அனுமதியளித்ததோடு, ஆணை மங்கலம் எனும் கிராமத்தையும் புத்த மடாலயத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.
- இவர் சைவ சமயத்தைப் பின்பற்றினார். இவரது காலத்தில்தான் தேவாரம் தொகுக்கப்பட்டது.
- இவர் கி.பி 1010 –ஆம் ஆண்டு தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினார்.
- **சிறப்புப் பெயர்கள்:** மும்முடிச் சோழன், சிவபாத சேகரன், பாண்டிய குலாசனி, நித்திய வினோதன், ஜெயங்கொண்டான், கேரளாந்தகன், கீர்த்தி பராக்கிரமன், சோழ மார்த்தாண்டன், சிங்களாந்தகன்.
- முதலாம் இராஜராஜ சோழன் நிலம் அளந்து தரம் பிரித்ததால் 'உலகளந்த சோழன்' என்று புகழப்பட்டார்.
- இவர் கி.பி. 1014 –ல் இயற்கை எய்தினார்.

## முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1014-கி.பி. 1044)

- இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழனைப் பற்றி திருவாலங்காடு செப்பேடுகள் மற்றும் கரந்தை செப்பேடுகள் பல தகவல்களைத் தருகின்றன.
- இவர் இடைதுறைநாடு (ரெய்ச்சூர் தோஆப்), வனவாசி (கம்பர் தலைநகர்), கொள்ளிப்பாக்கை (ஹைதராபாத் பகுதி), மண்ணைக்கடக்கம் (மால்கெட்) ஆகிய இடங்களை வென்றார்.
- ஈழ மண்டலம் எனப்பட்ட இலங்கை முழுவதையும் கைப்பற்றினார்.
- பாண்டியர், சேரர், மேலைச் சாளுக்கியர் ஆகியோரையும் தோற்கடித்தார்.
- ஸ்ரீவிஜயம், கடாரம், மலேசியா தீபகற்பம் மற்றும் நிக்கோபார் தீவுகளைச் சார்ந்த பகுதிகள் ஆகிய இடங்களை, கடல் கடந்து போரிட்டு வென்றது இவரது மிகச்சிறந்த செயலாகும்.

- இராஜேந்திரன் காலத்தில் சோழப் பேரரசானது புகழின் உச்ச நிலையை எய்தியது.
- இவர் வங்காள அரசன் முதலாம் மகிபாலனைத் தோற்கடித்து கங்கையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகிலுள்ள **சோழகங்கம்** (கங்கா ஜலமயம் - ஜலஸ்தம்பம்) என்ற ஏரியை அமைத்து அதில் கலந்தார்.
- முதலாம் இராஜேந்திரன் தமது வட இந்திய படையெடுப்பின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் **கங்கை கொண்ட சோழபுரம்** என்ற நகரை நிர்மாணித்தார். அங்கு ராஜேஸ்வர ஆலயத்தையும் எழுப்பினார்.
- இவர் தலைநகரை தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினார்.
- இவர் தமது மகள் **அம்மங்கா தேவியை** வெங்கியைச் சேர்ந்த சாளுக்கிய இளவரசன் இராஜராஜனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

**பட்டப்பெயர்கள்**

- கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், முடிகொண்டான், பண்டித சோழன், உத்தம சோழன், விக்கிரம சோழன்.

## முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070 – கி.பி 1120)

- குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், விக்கிரம சோழன் உலா ஆகிய நூல்கள் குலோத்துங்கனின் நிர்வாகம், இராணுவ வெற்றிகள் பற்றி விளக்குகின்றன.
- முதலாம் குலோத்துங்க சோழன் அம்மங்காதேவியின் மகனாவார்.
- இவர் வெங்கியை ஆண்ட சாளுக்கிய மரபைச் சேர்ந்தவர். பின்னர் சோழ நாட்டுக்கு மன்னரானார்.
- இவர் சோழ நாட்டுடன் வெங்கியை இணைத்து, சாளுக்கிய சோழமரபைத் தோற்றுவித்தார்.
- மேலைச் சாளுக்கிய மன்னர் விக்கிர மாதித்தனை தோற்கடித்து கலிங்கத்தைக் கைப்பற்றினார்.
- இவர் காலத்தில் இலங்கை சோழப் பேரரசிலிருந்து விடுதலை பெற்றது.
- ஸ்ரீவிஜயம் என்ற நாட்டுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்ததால் கி.பி. 1077 –ல் அங்கு வணிகக் குழுவினரையும் அனுப்பி வைத்தார்.
- இவர் சீன அரசவைக்கு தூதுவரை அனுப்பினார்.
- இவர் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சுங்க வரி உட்பட பலவிதமான வரிகளை நீக்கியதால், சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பட்டப் பெயரைப் பெற்றார்.
- சோழப் பேரரசு இவர் காலத்தில் புத்துயிர் பெற்றது. இவர் ஒட்டக்கூத்தர், சேக்கிழார், கம்பர், புகழேந்தி, ஆகிய புலவர்களை ஆதரித்தார்.

**பட்டப் பெயர்கள்**

- சுங்கம் தவிர்த்த சோழன், திருநீற்றுச் சோழன்.

**மூன்றாம் குலோத்துங்க சோழன்**

- இரண்டாம் குலோத்துங்கன் **கிருமிகண்ட சோழன்** என்று அழைக்கப்பட்டார்.
- சோழநாட்டை ஆண்ட கடைசி சிறந்த அரசன் **மூன்றாம் குலோத்துங்கன்** ஆவார். இவர் கி.பி. 1205-ல் மதுரையைக் கைப்பற்றி **"சோழபாண்டியன்"** என்று பட்டம் சூட்டிக்கொண்டார்.
- சோழ மன்னன் மூன்றாம் இராஜேந்திரன் (கி.பி. 1246 – 1279) காலத்தில் சோழப் பேரரசு சிதைவுறத் தொடங்கியது.
- காடவராயன் போன்ற குறுகிய மன்னர்கள் எழுச்சி, பாண்டிய நாட்டு எழுச்சி ஆகியவை சோழ அரசை நிலைகுலையச் செய்தது.
- பாண்டிய மன்னன் இரண்டாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் கடைசி அரசனான **மூன்றாம் இராஜேந்திரனை** வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினார். அத்துடன் சோழப் பேரரசு முடிவுக்கு வந்தது.

**சோழ ஆட்சி முறை**

- சோழர்களின் நிர்வாகம் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு கூறுகிறது.
- சோழப் பேரரசு 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாகாணங்கள் மண்டலங்கள் என்றும் அதன் தலைவர்கள் ஆளுநர்கள் என்றும் அழைக்கப்பட்டன.

| | |
|---|---|
| **சோழ மண்டலம்** | **திருச்சி, தஞ்சை பகுதிகள்** |
| **இராஜராஜ பாண்டி மண்டலம்** | பாண்டிய நாடு |
| **ஜெயங்கொண்ட சோழ மண்டலம்** | தொண்டை நாடு |
| **மும்முடி சோழ மண்டலம்** | இலங்கை |
| **முடிகொண்ட சோழ மண்டலம்** | கங்கப்பாடி |
| **நிகரிலி சோழ மண்டலம்** | நுளாம்பாடி |
| **அதிராஜராஜ சோழ மண்டலம்** | கொங்கு நாடு |
| **மலை மண்டலம்** | கேரளம் |
| **வேங்கை மண்டலம்** | கீழை சாளுக்கிய நாடு |

- சோழ நாட்டின் நிர்வாக அடிப்படை அலகு **'ஊர்'** என்பதாகும். பல ஊர்கள் சேர்ந்தவை **வளநாடு** என்றும், பல வளநாடுகள் சேர்ந்தது **மண்டலம்** என்றும், மண்டலங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்ததாக **சோழநாடு** விளங்கியது.
- கிராமங்கள் சோழர் நிர்வாகத்தின் கடைசி அங்கமாக விளங்கின.
- **கிராம சுயாட்சி** என்பது சோழர் நிர்வாகத்தின் ஒரு சிறப்பு அம்சமாகும்.
- பெருந்தனம், சிறுதனம் என்று அழைக்கப்பட்ட அதிகார வர்க்கம் ஆட்சிக்கு பொறுப்பு வகித்தன.

| | |
|---|---|
| **திருவாய் கேள்வி** | **அரசனின் ஆணைகளை வெளியிடுபவர்** |
| **திருமந்திர ஓலை நாயகம்** | அரசின் ஆணைகளை ஓலையில் எழுதுபவர் |
| **கருமவிதிகள்** | ஆணைகளை நாட்டின் பல இடங்களுக்குக் கொண்டு செல்பவர் |
| **புரவுவரி திணைக் களத்தார்** | நிலவரிக் கழகம் |
| **வரிப்பொத்தகக் கணக்கு** | அரண்மனைக் கணக்காளர் |
| **நாடுவகை செய்வார்** | விளை நிலத்தின் தரத்தைப் பிரிப்பவர் |
| **நாடு காவல் அதிகாரி** | நாட்டில் அமைதியை நிலைநாட்டுபவர் |

- சோழ அரசின் முக்கிய வருவாய் நிலவரியாகும். இது விளைச்சலில் ஆறில் ஒரு பங்காக (1/6) இருந்தது.
- நிலவருவாய்த்துறை **புறவு வரித்திணைக் களம்** என்று அழைக்கப்பட்டது.
- சோழர்களின் கப்பற்படை தென்னிந்தியாவிலேயே வலிமை மிக்கதாக இருந்தது. இதனால் வங்காள விரிகுடா **சோழர்களின் ஏரிபோல** விளங்கியது.
- **“நாடு”** என்பது சோழர்களின் நிர்வாகத்தில் ஒரு முக்கியப் பிரிவு ஆகும். இதன் தலைவர்கள் **நாட்டார்கள்** என்று அழைக்கப்பட்டனர்.
- முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சேர்ந்த உத்திரமேரூர் கல்வெட்டு, கிராம நிர்வாகத்தைப் பற்றியும் விரிவாக விளக்குகிறது.
- கிராம நிர்வாகத்தை கிராம சபை என்ற நிர்வாகக் குழு கவனித்து வந்தது. கிராம சபை உறுப்பினர்கள் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- கிராம குடியிருப்பு பகுதிகள் **“ஊர் நத்தம்”** என்றும் பிராமணர்கள் குடியிருந்த பகுதி **சதுர்வேதி மங்கலம்** என்றும் அழைக்கப்பட்டன.
- கிராம நிர்வாகத்தினை வாரியங்களின் துணையுடன் கிராம நிர்வாகக் குழுக்கள் சிறப்பாக செய்தன. இவ்வாரியத்தின் உறுப்பினர்கள் **வாரியப் பெருமக்கள்** என்று அழைக்கப்பட்டனர்.
- ஏரி வாரியம், தோட்ட வாரியம், பஞ்ச வாரியம், பொன் வாரியம், புறவு வரி வாரியம் ஆகியவை குறிப்பிடத் தகுந்தன ஆகும்.
- வாரிய எண்ணிக்கையும், உறுப்பினர் எண்ணிக்கையும் கிராமங்களுக்கேற்ப மாறுபட்டது.
- கோயில் பணிகளும் அவற்றின் அறக்கட்டளைகளும் அந்தணர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. இவற்றை ஏற்று நடத்துவோர் மூலப்பருடையோர் என்றழைக்கப்பட்டனர்.
- சோழர்களின் கிராம நிர்வாகத்தில் மிகவும் சிறந்த அம்சமாகக் **குடவோலை** முறை கருதப்படுகிறது.
- நிர்வாக வசதிக்காக ஒவ்வொரு கிராமமும் 30 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பிரதிநிதி குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**சமுதாய நிலை**

- சமுதாயம் வர்ணாசிரமக் கொள்கையின் அடிப்படையில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- கரிகாலன் காலத்தில் **வலங்கை, இடங்கை** ஆகிய சமுதாயப் பிரிவுகள் இருந்தன. வலங்கை பிரிவில் 98 சாதிகளும், இடங்கை பிரிவில் 98 சாதிகளும் இருந்தன.
- அடிமை முறை மற்றும் அடிமை வியாபாரம் பற்றி கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**படைகள்**

- யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, கப்பற்படை ஆகிய பிரிவுகளைக் கொண்ட நிலையான படையை பெற்றிருந்தனர்.
- அரசரின் **தனிப்படை கைக்கோளப் பெரும்படை** எனப்பட்டது. அரசரைப் பாதுகாக்கும் சிறப்புக் காவல் வீரர்களுக்கு வேலைக்காரர் எனப்பட்டனர்.
- இராணுவ முகாம்கள் **கடங்கள்** என்று அழைக்கப்பட்டன.

**பெண்கள் நிலை:**

- பெண்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதி நடைமுறையில் இருந்தது.
- முதலாம் பராந்தகன் ஆட்சியில் வீரச்சோழ இளங்கோவன் என்ற கொடும்பாளூர் சிற்றரசனின் மனைவி கங்காதேவி, சுந்தரசோழனின் மனைவி வானவன் மாதேவியார் ஆகியோர் உடன்கட்டை ஏறிய செய்தி பற்றி திருவாலாங்காட்டு செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.
- அரசி **செம்பியன் மகாதேவியும், குந்தவை அரசியும்** கோயில்களின் காப்பாளராக விளங்கினர்.
- பெண்கள் **"சிறுபாடு"** என்னும் சிறுசேமிப்பு பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.
- **தேவதாசி முறை** சோழர் காலத்தில்தான் தோன்றி வளர்ந்தது.

**பொருளாதார நிலை**

- மகாபலிபுரம், காவிரி பூம்பட்டினம், சேலையூர், கொற்கை அகிய சோழத் துறைமுகங்கள் மூலம் அயல்நாட்டு வாணிபம் நடைபெற்றது.
- யானைகள், ஏலக்காய், பருத்தி மற்றும் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. **அரேபிய குதிரைகள்** இறக்குமதி செய்யப்பட்டன.
- சோழ அரசர்களின் பொன், வெள்ளி, செப்பு நாணயங்களை வெளியிட்டனர்.
- திராவிடப்பாணி கட்டடக்கலை சோழர் காலத்தில் ஏற்றம் பெற்றது.
- ஆரம்ப காலத்தில் சோழர்கள் செங்கற்கோயில்களையும் பிற்காலத்தில் கற்கோயில்களையும் கட்டினர்.
- சோழர்காலக் கோயில்களின் தனிச் சிறப்பு அதன் விமானமாகும்.

- இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயில், **தமிழகத்திலேயே மிக அகலமான மற்றும் உயரமான விமானம்** கொண்ட கோயிலாகும்.
- **முதலாம் குலோத்துங்கன், கும்பகோணத்தில் சூரியக் கடவுளுக்காக ஒரு கோயிலைக் கட்டினார். தென்னிந்திய வரலாற்றில் சூரியனுக்காக கட்டப்பட்ட முதல் கோயில் இதுவாகும்.**
- இரண்டாம் இராஜராஜன் தராசுரத்தில் ஐராவதீஸ்வரர் கோயிலைக் கட்டினார்.
- விஜயாலயன், நார்த்தாமலையில் (புதுக்கோட்டை மாவட்டம்) சோழீஸ்வரம் என்ற கோயிலைக் கட்டினார். இக்கோயில் முற்கால சோழர்களின் கட்டடக் கலைக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.
- சோழர்கால ஓவியக் கலை வளர்ச்சிக்கு முதலாம் இராஜராஜனும் ராஜேந்திரனும் அதிக பங்காற்றினர்.
- சோழர்களது சுவரோவியங்களை தஞ்சாவூர், திருமயம், காஞ்சி கைலாசநாதர் கோயில், நார்த்தா மலை ஆகிய இடங்களில் காணலாம்.

**இசைக்கலை & நடனக்கலை**

- சோழர்கால இசைக்கலையில் ஆய்ச்சியர் குரவை எனப்படும் ஏழு பண்களை மாறி மாறிப்பாடி இசை எழுப்புவதும் ஓசைநயம் காட்டிப்பாடுவதும் குறிப்பிடத்தக்கது.
- தேவாரப் பாடல்களை ஓதவும் திருப்பதிகங்களை விண்ணப்பிக்கவும் இசைக்கலைஞர்களுக்கு திருத்தாண்டக என்ற நிலம் அளிக்கப்பட்டது.
- சோழர் காலத்தில் இசைக் கலை நன்கு வளர்ச்சியுற்றது. இசையில் 23 பண்கள் உபயோகிக்கப்பட்டன.
- இன்றைய கர்நாடக இசைக்கு சோழர்காலத்தில் தான் அடித்தளமிடப்பட்டது. இதே நாட்களில்தான் பரத நாட்டியம் என்னும் ஆடற்கலையும் தோன்றியது.
- நடன கலைஞர்களுக்கு மாணிக்கம், காவிதி, தலைக்கோலி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.
- சோழர் காலத்தில் கதகளி, பரதநாட்டியம் ஆகிய இருவகை நடனங்கள் போற்றி மதிக்கப்பட்டன.
- சிவ பெருமானே கரனவகை நடனத்திற்கு உதாரண நாயகராகக் கருதப்பட்டார்.
- நடராஜபெருமானின் கரன வகை நடனத்திற்கு உதாரண நாயகராகக் கருதப்பட்டார்.
- நடராஜப்பெருமானின் நாட்டியக் கோல சிலைகள் சிதம்பரம் நடராஜர் கோயிலும், கும்பகோணம் சாரங்கபாணி கோயிலும் காணப்படுகின்றன.
- தாராசுரம் - ஐராவதேஸ்வரர் கோவில் நாகரம், திராவிடம், வேசரம் ஆகிய மூன்று கலை பாணிகளை உள்ளடக்கியது.
- இரண்டாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட இக்கோவிலின் விமான சுவர்களில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

- சோழர் காலக் கோயில்கள் மிகப் பழமையானது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கட்டப்பட்ட தாடபுரம் கோவில் ஆகும்.
- தஞ்சையிலுள்ள **பிரகதீஸ்வரர் கோயிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள கோயிலும்** சோழர்கால கலாச்சார நினைவுச் சின்னங்களாக யுனெஸ்கோ நிறுவனத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.

திண்ணை பயிற்சிப் பட்டறை தேனி 99409 70325

**மாதிரி வினாத்தாள்:**

1. 'குருத்வாரா' பற்றி கீழ்கண்டவற்றை கவனிக்கவும்:
   1. கடவுளின் இல்லத்திற்கு செல்லக்கூடிய பாதை என்னும் பொருள்படும் சீக்கிய புனித ஸ்தலம் குருத்துவாரா ஆகும்.
   2. முதல் குருத்துவாராவை குரு இராம்சிங் கட்டினார்.
   3. சீக்கிய குருத்துவாராக்கள் சமய கொடியான நிஷான் சாகிப்பை குருத்துவாராக்கு முன்புறம் வைக்க வேண்டும்.

   A. 1,3 மட்டும் சரி B. 1 மட்டும் சரி C. 2,3 மட்டும் சரி D. அனைத்தும் சரி

   E. விடை தெரியவில்லை

2. கி.மு. 261 இல் நடைபெற்ற கலிங்கப்போர் வெற்றிக்குப்பின் அசோகர் பௌத்த மதத்திற்கு மாறினார். அவரை மாற்றிய சமயத்துறவி யார்?

   A. பத்ரபாகு B. உபகுப்தர் C. சுபந்து D. ஆனந்தன்

   E. விடை தெரியவில்லை

3. தில்லி சுல்தானிய பேரரசினை வம்சத்தின்படி இறங்கு வரிசையில் வரிசைப்படுத்துக:
   1. கில்ஜி 2. துக்ளக் வம்சம் 3. அடிமை வம்சம் 4. லோடி வம்சம்
   5. சையது வம்சம்

   A. 3 4 2 1 5 B. 3 1 2 5 4 C. 5 4 1 2 3 D. 5 3 2 1 4

   E. விடை தெரியவில்லை

4. கூற்று : கான்வா போர் (1527) பாபர் மற்றும் ராணா சங்காவிற்கு இடையில் நடைபெற்றது. இதில் பாபர் வென்றார்.

   காரணம் : துல்க்மா படையின் துணையினால் பாபருக்கு இந்த வெற்றி சாத்தியமாயிற்று.

   A. கூற்று, காரணம் சரி, சரியான விளக்கமாகும் B. கூற்று சரி காரணம் தவறு

   C. கூற்று, காரணம் தவறு D. கூற்றும் காரணமும் சரி, சரியான விளக்கமல்ல.

   E. விடை தெரியவில்லை

5. கீழ்காணும் கூற்றுகளை ஆராய்க:
   1. அலகாபாத் தூண் கல்வெட்டு சமுத்திரகுப்தரின் போர் வெற்றி பற்றிக் கூறுகிறது.
   2. மெஹ்ரோலி இருப்புத் தூண் குப்தர்களின் உலோக கலைக்கு சிறந்த சான்றாகும்.
   3. கி.பி. 7 - ம் நூற்றாண்டில் இந்தியப் பண்பாடு சிறப்புற்றிருந்ததாக சீனப்பயணி இட்சிங், தமது குறிப்பில் கூறுகிறார்.

4. புத்தகோசர் என்ற இலங்கை நாட்டு பௌத்த சமயஅறிஞர், குப்தர் காலத்தில் புகழ்பெற்றிருந்தார்.

A. 3,4 மட்டும் சரி B. 1,2,4 மட்டும் சரி C. அனைத்தும் சரி D. 2 மட்டும் சரி

E. விடை தெரியவில்லை

6. தனது 7வது தூண் கல்வெட்டில் "தர்மமானது நெடுநாள் வாழும் பொருட்டு எங்கெல்லாம் கற்றூண்களும் கற்பாறைகளும் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் தர்ம ஆணைகள் பொறிக்கப்படுவதாக" என்று கூறிய அரசர் யார்?

A. கனிஷ்கர் B. முதலாம் சந்திரகுப்த மௌரியர் C. அசோகர்

D. முதுகுடும்பி பெருவழுதி E. விடை தெரியவில்லை

7. பொருத்துக:

a. குதுப்ஷாஹி - 1. பீடார்

b. அடில்ஷாஹி - 2. அகமது நகர்

c. இமத்ஷாஹி - 3. பெடார்

d. பரித்ஷாஹி - 4. பீஜப்பூர்

e. நிஜாம் ஷாஹி - 5. கோல்கொண்டா

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A | 5 | 4 | 3 | 2 | 1 |
| B | 4 | 5 | 1 | 3 | 2 |
| C | 2 | 3 | 4 | 5 | 1 |
| D | 3 | 5 | 4 | 2 | 1 |

E விடை தெரியவில்லை

8. விருபாக்ஷர் கோயிலின் அடித்தளக் கட்டுமானத்தின்படி கட்டப்பட்ட கோவில் எது? இங்குள்ள கருவறையை வடிவமைத்தவர் ரேவதி ஓவஜா, மேலும் இராமாயணக் காட்சிகள் சிறப்பமாக செதுக்கப்பட்டுள்ளன?

A. காஞ்சி கைலாசநாதர் கோயில் B. பாபநாதர் கோயில்

C. வைகுண்ட பெருமாள கோயில் D. சென்னை கேசவன் கோயில்

E. விடை தெரியவில்லை

பயிற்சிப் பட்டறை திண்ணை 99409 70325 தேனி

9. லிட்டன் பிரபு எழுதிய “The Secret Way” என்ற நூலை “இரகசிய வழி” என்ற பெயரில் மொழிபெயர்த்தவர்

A. மனோன்மணியம் சுந்தரனார் B. ஆறுமுக நாவலர் C. மறைமலை அடிகள்

D. தேவநேயப் பாவலர் E. விடை தெரியவில்லை

10. பொருத்துக:

a. லாகூர் - 1. அவுரங்கசீப்

b. ஜமி மசூதி - 2. அக்பர்

c. செங்கோட்டை - 3. ஜஹாங்கீர்

d. அக்பரின் சமாதி - 4. ஷாஜகான்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 2 | 1 | 4 | 3 |
| B | 2 | 4 | 1 | 3 |
| C | 3 | 4 | 1 | 2 |
| D | 1 | 2 | 3 | 4 |

E. விடை தெரியவில்லை

**Answer Key**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | B | A | C | C | A | B | A | A |

திண்ணை பயிற்சிப் பட்டறை தேனி 99409 70325